DINAMALAR

14 MAY 2022

PAGE 3

# புதுச்சேரி பல்கலையில் தீ தடுப்பு பயிற்சி முகாம்



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தீ விபத்து தடுப்பு மற்றும் பாதுகாப்பு பயிற்சி முகாமை, பதிவாளர் அமரேஷ் சமந்தராயா துவக்கி வைத்து பேசினார். அருகில், உதவி பதிவாளர் மகேஷ், எஸ்.பி., நல்லாம் கிருஷ்ணராய பாபு.

**புதுச்சேரி, மே 14–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தனியார் பாதுகாவலர்களுக்கு தீ விபத்து தடுப்பு மற்றும் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த இந்த முகாமை, பதிவாளர் அமரேஷ் சமந்தராயா துவக்கி வைத்தார். மக்கள் தொடர்பு பிரிவு உதவி பதிவாளர் மகேஷ், பல்கலைக்கழக எஸ்.பி., நல்லாம் கிருஷ்ணராய பாபு, தனியார் பாதுகாவலர் நிறுவனத்தின் துணைத் தலைவர் ராமகிருஷ்ணன் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

பயிற்சி முகாமில் தீயணைப்பு அதிகாரி ரவிச்சந்திரன், தீப்பிடித்தவுடன் என்ன செய்ய வேண்டும், தீயை எவ்வாறு அணைப்பது, முதலுதவி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளை பாதுகாப்பு பணியாளர்களுக்கு அளித்தார்.

DINAMANI

14 MAY 2022

PAGE 2

# கியூட் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

## புதுச்சேரி மத்திய பல்கலை. தகவல்

**புதுச்சேரி**, மே 13: கியூட் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் நாள் வருகிற 22-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் தெரிவித்தது.

இதுகுறித்து புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தேசிய தேர்வு முகமையானது பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வுக்கு (கியூட்) விண்ணப்பிக்கும் கடைசி நாளை வருகிற 22-ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது. தேர்வுக்கு http:/cuet.samarth.ac.in/ என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பான விவரங்கள் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் www.pondiuni.edu.in/admissions}2022}23/என்றஇணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வுக்கு விண்ணப்பித்தோர் http:/cuet.samarth.ac.in/,http://nta.ac.in/ என்ற இணையதளங்களை தொடர்ந்து பார்த்து வர வேண்டும்.

பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வை அடிப்படையாகக் கொண்டு, புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு வருகிற 22-ஆம் தேதி இரவு 11.50 மணி வரை விண்ணப்பித்து, பணம் செலுத்தலாம். படிப்புகளில் சேர விரும்புவோர், முதலில் 2022 - 23ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்திருக்க வேண்டும். இதில், வருகிற 31-ஆம் தேதி வரை திருத்தங்களை மேற்கொள்ள தேசிய தேர்வு முகமை அனுமதியளித்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAKARAN

14 MAY 2022

PAGE 7

# கியூட் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

## புதுவை பல்கலைக்கழகம் தகவல்

புதுச்சேரி, மே 14: புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தேசிய தேர்வு முகமையானது பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவு தேர்வுக்கு (கியூட்) விண்ணப்பிக்கும் கடைசி நாளினை வரும் 22ம் தேதி வரை நீட்டித்துள்ளது. தேர்வுக்கு *https://cuet.samarth.ac.in/*. என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். இதுதொடர்பான விவரங்கள் புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தின் *www.pondiuni.edu.in/admissions-2022-23/* என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வுக்கு விண்ணப்பித்தோர் *https://cuet.samarth.ac.in/*. மற்றும் *https://nta.ac.in/* என்ற இணையதளத்தை தொடர்ந்து பார்த்து வர வேண்டும்.

பல்கலைக்கழக பொது நுழைவு தேர்வினை அடிப்படையாக கொண்டு, புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு வரும் 22ம் தேதி இரவு 11.50 மணி வரை விண்ணப்பித்து, பணம் செலுத்தலாம். இதில் வரும் 31ம் தேதி வரை திருத்தங்களை மேற்கொள்ள தேசிய தேர்வு முகமை அனுமதியளித்துள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.